1972 ஆகஸ்ட் 21]

திரு. கே. எ. வகாப் : இப்படி எடுத்துக்கொள்ளப்படுகிற உயர்நிலைப்பள்ளிகள் எந்த ஆண்டிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972-73-இல், அதாவது இந்த ஆண்டில் எடுத்துக்கொள்வதாகத்தான் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ரெங்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

*208 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரம் உயர்நிலைப்பள்ளி, கட்டட வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், கட்டட வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, a number of elementary schools require their own buildings. At present the Panchayat Unions construct buildings and they have not been properly constructed. With two years they fall down or crack. So, may I know whether the construction of the buildings would be taken up by the Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஓரளவு நிதி வசதி அடிப்படையில்தான் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன, இப்பொழுது பஞ்சாயத்து யூனியன் சார்பாகக் கிட்டதட்ட 23,000 சில்லரை பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 12,000 சில்லரை பள்ளிகள் தான் நல்ல கட்டடங்களில் அமைந்திருக்கின்றன. மற்றவைகளுக்கு நல்ல கட்டடங்கள் இல்லை. அவைகளுக்கெல்லாம் கட்டடங்கள் வழங்கவேண்டும் என்பதற்காக நிதி வசதி ஆயுள் காப்புறுதிக் கழகத்தினிடமிருந்து பெறலாமா என்ற எண்ணம் இருக்கிறது. அரசுக்கு நேரடியாகக் கடன் தரும் நிலைமை ஆயுள் காப்புறுதிக் கழகத்திற்கு இல்லை. ஆகவேதான் இதற்குத் தனி வாரியம், டி.ஆர்.டி. அவர்களைப் பொறுப்பாளியாக நியமித்து, வைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு கடன் வாங்கியதற்குப் பிறகு பல பள்ளிகளுக்குக் கடன் வழங்கி பள்ளிக்கூடங்களைக் கட்டலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது.